செ.வெ.எண்:45/ஜூன் நாள்:18.06.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**கடல் மீனவர்/மீனவ மகளிர்கள் உயிரி தொழில் நுட்ப அடையாள அட்டை பெறுவதற்கு ஏதுவாக ஜூன் 20-ஆம் தேதி முதல் ஜூன் 30-ஆம் தேதி வரை புகைப்படம் எடுக்கும் முகாம் நடத்தப்படவுள்ளது.**
**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

மத்திய அரசு நிதியுதவியுடன் தமிழக கடலோர மாவட்டங்களில் வாழும் கடல் மீனவர்/மீனவ மகளிர்களுக்கு கடலோர பாதுகாப்புக்கருதி உயிரிதொழில் நுட்ப அடையாள அட்டைகள் (Biometric ID card) ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கடலோர மீனவ கிராமங்களில் உயிரி தொழில் நுட்ப அடையாள அட்டை (Biometric ID card) எடுக்காமல் விடுப்பட்டுள்ள மீனவர்/மீனவ மகளிர்களுக்கு எதிர்வரும் ஜூன் 20-ஆம் தேதி முதல் ஜூன் 30-ஆம் தேதி வரை பெங்களூரிலுள்ள பாரத் மின்னனு (BEL) நிறுவனம் மூலம் புகைப்படம் எடுக்கும்பணி நடத்தப்பட உள்ளதால், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கடல் மீனவர்/மீனவ மகளிர்கள் உயிரி தொழில் நுட்ப அடையாள அட்டை பெறுவதற்கு ஏதுவாக ஜூன் 20-ஆம் தேதி முதல் ஜூன் 30-ஆம் தேதி வரை புகைப்படம் எடுக்கும் முகாம் நடத்தப்படவுள்ளது. எனவே, இராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் தங்களது கிராமப் பகுதிகளில் உயிரி தொழில் நுட்ப அடையாள அட்டை பெறுவதற்கு புகைப்படம் எடுப்பதற்கான நாள் மற்றும் விவரங்கள் குறித்த தகவல்களை தங்களது பகுதி மீன்வளத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி தெரிந்துகொண்டு, இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**